செ.வெ.எண்:08/2017 நாள்:05.10.2017

**<u>சிவகங்கை மாவட்ட புனித ஜஸ்டின் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சுகாதாரத்துறையின் சார்பில் டெங்கு ஒழிப்பு தின உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் பள்ளி மாணவிகள் ஏற்றுக் கொண்டனர்.</u>**



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் சுகாதாரத்துறை அலுவலர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறப்பு காய்ச்சல் பிரிவு மையங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா.,அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சுகாதாரத்துறை அலுவலர்கள் உள்ளனர்.



சிவகங்கை மாவட்ட புனித ஜஸ்டின் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சுகாதாரத்துறையின் சார்பில் டெங்கு ஒழிப்பு தின உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் பள்ளி மாணவிகள் ஏற்றுக் கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பிரதி வாரம் வியாழக்கிழமைதோறும் டெங்கு ஒழிப்பு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இன்று (05.10.2017) புனித ஜஸ்டின் மகளிர் மேல்நிலைப் பள்ளியில்

“நான் எனது வீட்டிலோ வீட்டின் சுற்றுப்புறத்திலோ டயர், தேங்காய் சிரட்டைகள், உடைந்த குடங்கள், உபயோகமற்ற பிளாஸ்டிக் கப்புகள் போன்ற பொருட்களைப் போடமாட்டேன். அவ்வாறு ஏதேனும் வீணான பொருட்கள் கிடந்தாலும் அவற்றை உடனே அகற்றி விடுவேன். எனது வீட்டில் தண்ணீர் சேமித்து வைக்கும் குடங்கள், சிமெண்ட் தொட்டிகள், டிரம்கள் ஆகியவற்றை கொசு புகாதவண்ணம் மூடி வைப்பேன். வாரம் ஒருமுறை தேய்த்துக் கழுவி சுத்தம் செய்வேன். இதன் மூலம் ஏடிஸ் கொசுப் புழு வளராமல் தடுப்பேன். நான் கற்றுக் கொண்டவற்றை அண்டை, அயலார்க்கும் கற்றுக் கொடுத்து டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் கொசு உருவாகாமல் பார்த்துக் கொள்வேன். தற்பொழுது அரசு எடுத்து வரும் அனைத்து கொசு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கும் நான் முழு ஒத்துழைப்பு கொடுப்பேன்” என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில்

உறுதிமொழியினை சுகாதாரத்துறை அலுவலர்கள், ஆசிரியர்கள், நகராட்சி அலுவலர்கள் மற்றும் மாணவிகள் ஏற்றுக் கொண்டனர்.

பின்னர், பள்ளி மாணவிகளுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.சாந்திமலர், இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மரு.விஜயன் மதமடக்கி, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.யசோதாமணி, முதன்மை கல்வி அலுவலர் திருமதி.மகேஸ்வரி, புனித ஜஸ்டின் மகளிர் மேல்நிலைப் பள்ளி முதல்வர் மரியாதெரசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.